குடும்ப ஆதிக்கம் அஸ்தமிக்கிறது



ஐ.தி. சம்பந்தன்
(ஒரு பேப்பருக்காக)

அனுரா பண்டாரநாயக்காவின் மறைவுடன் பண்டார நாயக்க குடுமபத்தின் ஆதிக்கம் அஸ்தமித்து விட்டது. இலங்கை அரசியலில் ஆட்சி நடாத்திய ஆட்சியாளர்கள் தமிழர்களின் பிரச்சனைகளை அடித்தளமாக வைத்து சிங்கள இனவெறியர்களின் ஆதரவுடன் ஆட்சி நடத்தி வருவது வரலாறு. குடும்ப அரசியல் அபிலாசைகளினை மட்டுமே கருத்திற் கொண்ட இவ்வாட்சியாளர்கள் தீவைப் படுகுழியில் தள்ளிவிட்டனர்.

இரத்தம் சிந்தாது எவ்வித போராட்டமும் இன்றி இலகுவாகப் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைத் துஸ்ப்பிரயோகம் செய்துள்ளனர். சுதந்திர இலங்கையின் முதற்பிரதமர் திரு.டீ.ஏஸ்.சேனநாயக்க தொடக்கம் இன்றய மகிந்த ராஜபக்ஸ வரையும் தமிழர் பிரச்சனையை மையமாக வைத்து ஆட்சிக்கு வந்து நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச்சென்றவரலாற்றை மக்கள் மறக்க மாட்டார்கள். தமிழர்களை வதைத்து ஆட்சிநடத்திய ஆட்சியாளர்களின் குடும்ப ஆதிக்கம் அஸ்தமிக்கத் தொடக்கிவிட்டது. தமிழர்களுக்கு கொடுமை செய்த அரசியல் தலைவர்கள் சிலர் அவஸ்தை மரணத்தையும் சிலர் மக்கள் செல்வாக்கையும் இழந்தநிலையிலும் மரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

தமிழ்தலைவர்களின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்த டி.ஏஸ். சேனநாயக்கா குடும்பத்தின் ஆட்சி அவரது மகன் டட்லிசேனநாயக்க அவர்களின் மறைவுடன் அஸ்தமித்துவிட்டது. திரு. டி.எஸ் சேனநாயக்கா பிரதமராக வந்ததும் 10 இலட்சம் மலையகத்தமிழ் மக்களின் வாக்குரிமை. குடியுரிமையைப் பறித்து நாடற்ற வர்களாக்கினார்.

கட்சியில் திரு.டி.எஸ். செய்த துரோகத்தால் அவருடன் இருந்த திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்து இனவாதத்தை முன்வைத்து 1956ல் ஆட்சிக்கு வந்தார். 'சிங்களம் மட்டும்' சட்டத்தை நிறைவேற்றி தமிழர்களுக்கு அநீதி இழைத்த திரு. பண்டாரநாயக்கா 1959ல் பௌத்த பிக்கு ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதன்பின் ஆட்சியல் அமர்ந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டுவந்து சட்டத்தில் தமிழர்களுக்கு இருந்த பாதுகாப்பை அகற்றியும். தரப்படுத்லையும், சிங்களம் மட்டும் சட்டத்தையும் தீவிரமாக அமுல்நடத்தி தமிழர்களுக்கு பெரும் கொடுமை இழைத்தார். அவருக்குக் கிடைத்த தண்டனை அவரது குடியுரிமை இழந்து சிலவருடங்கள் அரசியல் அனாதையானார், சுதந்திரக்கட்சிக்குள் அனுராசெய்த குளறுபடியால் நிம்மதியற்ற வாழ்வு. கட்சியை மகள் சந்தரிகாவிடம் கொடுத்து விட்டு பரம்பரை வாரிசு அனுரா தனிமைப்படுத்தப்பட்டதால் நோயுற்ற நிலையில் முடங்கிய பிரதமராக மறைந்தார்.

சுதந்திரக்கட்சியைப் பறித்தெடுத்த திருமதி சந்திரிகா குமாரதுங்கா தமிழர் பிரச்சனையைத் தீர்த்து நாட்டில் சமாதானத்தைக் ஏற்படுத்துவேன் என்று தமிழர்களின் பெருந் தொகை வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தார். ஆட்சி அதிகாரத்தைச் சுவைக்கத் தொடங்கியதும் கொடுத்த வாக்குறுதியை மறந்து தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான யாழ் பிரதேசத்தை சிங்கள ராணுவ பலத்தால் ஆக்கிரமித்து 5இலட்சம் தமிழர்களைக் குடாநாட்டிலிருந்து ஓடவைத்தார்.

அவர் 11 வருட ஆட்சியின் பின் இலங்கை நாட்டை விட்டோடி வெளிநாட்டில் அரசியல் அஞ்ஞான வாசம் செய்தார். தந்தை பண்டாரநாயக்க வளர்த்த சுதந்திரக்கட்சியையும் பறிகொடுத்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 12 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் இரு இனக்கலவரங்களால் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர் அவர்களது கோடானுகோடி சொத்துக்கள் அழிக்கப்படட்ன. பெறுமதி மிக்க யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டதும் அவரது காலத்திலேயே. ஜே.ஆர் தமிழர்களுக்குச் செய்த கொடுமையால் மறையும்போது மக்கள் செல்வாக்கற்ற தலைவராக மறைந்தார். அவர் மறைவுடன் ஜே.ஆர் சகாப்தம் அஸ்தமித்தவிட்டது.

தனக்குப்பின் ஆட்சியில் இருக்கவேண்டுமென்று நம்பி உருவாக்கிய திரு. ரணில் விக்கிரமசிங்கா ஆட்சிக்கு வந்ததும் ஒரு நல்ல சந்தர்ப்பதை அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நாட்டில் சமாதானத்தை உருவாக்கியிருந்தார். அதைச் சரியாக நடைமுறைப்படுத்தத் தவறியதோடு இவரை நம்பி உடன் படுக்கை செய்துகொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கு செய்த சூழச்சியால் ஜனாதிபதியாக வரும் வாய்பை இழந்தார்.

இன்று பண்டாரநாயக்காவின் சுதந்திரக்கட்சியை அபகரித்து தனது குடும்பச்சொத்தாக்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தமிழினப் படுகொலையை ச்செய்து சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தி வருகின்றார். அவரது ஆட்சியும் கட்சி ஆதிக்கமும் அஸ்தமிக்கும் காலம் விரைவில் வந்து கொண்டிருக்கிறது.

இந்த வரலாறுகளை நோக்கும்போது இனிமேல் சிங்கள அரசியல் வாதிகளிடையே ஒரு தேசியத் தலைமை உருவாகுவதற்கான வாய்ப்பு இல்லை. அதனால் ஐக்கிய இலங்கை என்ற பேச்சுக்கே இடமில்லை.

தமிழினம் அழிவிலிருந்து தப்ப வேண்டுமானால் என்ன விலை கொடுத்தேனும் தனி ஆட்சி அமைப்பதே ஒரு வழி. சிங்களத் தலமைகள் விட்ட தவறால் பிறந்தவழியே தனியாட்சி. இதைச் சர்வதேச சமூகம் புரிந்து செயலாற்ற வேண்டும்.

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

நீர் வாயுக் குண்டு

இன்றுவரை எட்டு நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, ஆகியவை ஈராயிரத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் அணு குண்டுகளையும் நீர்வாயுக் குண்டுகளையும் பரிசோதனைக்காக வெடிக்க வைத்துள்ளன

இவற்றுள் வட கொரியாவிடமும் பாகிஸ்தானிடமும் அணு குண்டுகள் மட்டும்தான் உள்ளது. அவற்றை நேரடியாக போர் தேவைக்கு பயன்படுத்தினால் அது எவ்வளவு சேதத்தை ஏற்படுத்தும் என்பது அவற்றை தயாரித்து வைத்திருக்கும் நாடுகளுக்கே துல்லியமாகப் புரிந்திருக்காது.

உலகின் சரித்திரத்திலேயே ஒருமுறைதான் யப்பானில் இரு அணு குண்டுகள் வீசப்பட்டன. உடனடியாக ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப் பட்டார்கள். அவ் வெடிப்பின் கதிர் வீச்சால் பாதிக்கப் பட்ட பலர் பின்பும் இறந்தார்கள். அவை வீசிய சில நாட்களில் நல்ல வேளையாக இரண்டாவது உலகப் போர் முடிவடைந்ததால் பேரழிவு தவிர்க்கப் பட்டது.

அணு குண்டினதும் நீர்வாயுக் குண்டினதும் செயற்பாட்டில் பாரிய வேறுபாடு உண்டு. முதல் வகை அணுவின் மையக்கருப் பிளவை அடிப்படையாகக் கொண்டது. மற்றையது மையக்கரு உருகி இணைவதை அடிப்படையாகக் கொண்டது.

நேர் மின்விசை கொண்ட புரட்ரோன் துகள்களும் சம மின்நிலை கொண்ட நியுரோன் துகள்களும் இணைந்து இருக்கும் மையப் பகுதியை மையக்கரு என்பார்கள். மையக்கருவை எதிர் மின் விசை கொண்ட எலக்ரான்கள் சுற்றிக் கொண்டு இருக்கும். இதுவே அணுவின் அடிப்படை அமைப்பு. முதலாவது மூலகமான நீர் வாயு மூலகத்திற்கு ஒரு புரட்ரோன் மட்டுமே உண்டு. பறக்கும் பலூன்களுக்கு உபயோகிக்கும் இரண்டாவது மூலகமான ஹீலியம் வாயுவுக்கு இரண்டு, எட்டாவதான பிராண வாயுவிற்கு எட்டு. முதன் முதலில் அணு குண்டிற்கு பயன்படுத்திய யுரேனியத்திற்கு 92. கடைசியாகக் கண்டுபிடித்த அனன்ஒக்ரியத்திற்கு 118.

அணுப்பிளவு என்பது யுரேனியம் போன்ற பெரிய கரு உள்ள ஒரு மூலகத்தின் கருவை நியுரன் தோட்டாக்களால் அடித்து பிளக்கச் செய்வது. பிளக்கப்பட்ட அணுவின் ஒரு பகுதி சக்தியாக மாறுகிறது. இந்த சக்திதான் ஹ்ரோசிமாவிலும் நாகசாக்கியிலும் பேரழிவை ஏற்படுத்தியது. இதே முறையைத்தான் அணு உலைகளில் நெறிப்படுத்தி அணுசக்தி பெறுகிறார்கள்.

அணு இணைவு என்பது கடும் வெப்ப சூழலில் நிகழ்வது. ஒரு நீர்வாயுக் குண்டு வெடிக்க வேண்டுமென்றால், முதலில் ஒரு அணுகுண்டு வெடித்து அணு இணைவுக்கு தேவையான வெப்பச் சூழலை உருவாக்கவேண்டும். எமது கதிரவனிலும் மற்றைய விண்மீன்களிலும் ஒவ்வொரு வினாடியும் கரு இணைவு நடந்து கொண்டே இருக்கின்றது.

எமது கதிரவனின் மையத்தில் 150 இலட்சம் செல்சியசுக்கு மேற்பட்ட வெப்பத்தில் நடைபெறும் இக்கரு இணைவினால் ஒவ்வொரு வினாடியும் 70 கோடி (700 மில்லியன்) தொன் நீர்வாயு ஹீலியமாக மாறுகிறது. முழுவதும் ஹீலியமாக மாறுவதில்லை. 0.7 வீதம், அதாவது அரைக் கோடி (5 மில்லியன்) தொன் சக்தியாக மாறிப் பல் திசைகளும் சிதறுகிறது. 200 கோடியில் ஒரு பகுதிதான் எம்மை வந்தடைகிறது.

அதுவே எம்மை இந்தப்பாடு படுத்துகின்றது என்றால், அந்த சக்தியின் ஆற்றல்பற்றி நாம் கற்பனையிற்கூட கணிப்புப் போட முடியாது. இதே அடிப்படையில் செயல்படும் நீர்வாயுக் குண்டின் சக்திபற்றி பெரிதாகச் சொல்லத் தேவை இல்லை. மிகவும் ஆபத்து மிக்க குண்டு.

அணு இணைவினால் உருவாகும் அளப்பரிய சத்தியை நெறிப்படுத்தி ஆக்க பூர்வமான தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உண்டு. ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. சாத்தியப்படும் காலம் குறைந்தது 50 என்று எதிர் பார்க்கிறார்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர்

We have been helping our client to make the most of their money for over 35 years. How have we been able to stay in business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they deserve.

- We are truly independent and can provide advice across the whole market.
- Our service focuses on your needs and meeting your financial goals.
- We provide ISA portfolios to match all types of investors.
- We provide comprehensive Inheritance Tax solutions, potentially saving 40% tax.

ARM Associates can promise you an expert, individually-tailored and cost-effective service. Whether you need specific advice or comprehensive financial planning, we can help.

ARM Associates
Professional Investment Advisers

For a free initial chat, to discuss your requirements, please call:
Mr P.Srinivasan CertPFS
Mr Suhan Srinivasan (Dip PFS, Economics BSc)
Tel: **020 8763 2221** / Fax: **020 8763 2220**
Email: **sri@srinivasan.co.uk** / Web: **www.srinivasan.co.uk**
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.

Authorised and Regulated by the Financial Services Authority.
The value of investments may fall as well as rise.